**Deposition of Witness**

**In the court of the Additional Subordinate Judge, Tenkasi.**

O.S. 311/2022

வா.சா.1 ராணி

| | | |
|---|---|---|
| Name | : | ராணி |
| Father's name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Religion | : | |
| Occupation | : | |
| Age | : | |
| Date | : | 19.08.2024 |

சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை

நான் இந்த வழக்கில் வாதி. நான் என்னுடைய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து உள்ளேன். அதில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை. அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். உபயவாதிகளின் குடும்ப கொடிவழி வா.சா.ஆ1. 16.02.2020ம் தேதியிட்ட உபயவாதிகளின் வாரிசு சான்று ஜெராக்ஸ் நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது வா.சா.ஆ2. 5.6.1971ம் தேதி ஆவண எண். 1324/1971 சண்முகம் கரையாளர் ஆவுடையம்மாள், வேலம்மாள், கோமதியம்மாள் ஆகியோர்களிடம் இருந்து கிரையம் வாங்கிய கிரைய ஆவணம் சார்பதிவாளர் நகல் வா.சா.ஆ3. 13.09.2001ம் தேதியிட்ட என் கணவரின் இறப்பு சான்று ஜெராக்ஸ் நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது வா.சா.ஆ4. 3.3.2022ம்தேதியில் பிராது தபசில் சொத்திற்குரிய வில்லங்க சான்று கணிணி வழி நகல் வா.சா.ஆ5. பிராது 3வது தபசில் சொத்தினை பொறுத்து நான் பிரதிவாதியின் பெயரில் மாறாந்தை தபசில் நிலையத்தில் செலுத்தி வருகிற கணக்கு புத்தகங்கள் ஜெராக்ஸ் நகல் எண்ணம்5 அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது வா.சா.ஆ6. 5.1.22ம் தேதி பிராது 2ம் தபசில் சொத்தினை பொறுத்து சப்பம்மாள் மற்றும் சாந்தி இருவரும் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த

பாகபாத்திய விடுதலை ஆவணம் சார்பதிவாளர் நகல் வா.சா.ஆ7. 7.1.2015ம் தேதியில் பிராது 1ம் தபசில் சொத்தினை பொறுத்து நான் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த ஏற்பாடு ஆவணம் அசல் வா.சா.ஆ8. பிராது 2ம் தபசில் சொத்துக்குரிய சண்முகம் கரையாளர் பெயரில் உள்ள சிட்டா அசல் வா.சா.ஆ9. 3.8.2023ம் தேதியில் நான் மாறாந்தை எச்.பி பெட்ரோல் வேலை செய்து வந்தேன் என்பதை காட்டக்கூடிய சான்று அசல் வா.சா.ஆ10. 7.09.2020ம் தேதி நான் பிரதிவாதிக்கு திருமணம் செய்து வைத்ததை காட்டக்கூடிய திருமண அழைப்பிதழ் அசல் வா.சா.ஆ11. 27.10.2022ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ12 28.10.2022ம் தேதியிட்ட ஒப்புதல் அட்டை அசல் வா.சா.ஆ13. பிராது 1ம் தபசில் சொத்திற்கு நான் செலுத்திய தீர்வை ரசீது அசல் வா.சா.ஆ14. பிராது படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)